# திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்

**திருச்சிராப்பள்ளி - 620 001**

இந்த சங்க வளாகத்தில் உள்ள கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ள
வாசகங்கள் அன்பர்கள் படித்துப் பயன்பெறும் வகையில்
அச்சிடப்பட்டு ஒரு புத்தக வடிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

படித்த பிறகு மற்றவர்களையும், குறிப்பாக
குழந்தைகளையும் படிக்கச் சொல்லலாமே!

# நல்லது

நல்லதை நினைப்போம்

நல்லதைப் பேசுவோம்

நல்லதைச் செய்வோம்

நல்லது தானாக வரும்!

# தூய்மை

நம்முடைய எண்ணங்கள் தூய்மை

நம்முடைய செயல்கள் தூய்மை

நம்முடைய இருப்பிடம் தூய்மை

# கோயில்

பள்ளிக்கூடம் ஒரு
கோயிலைப் போல
இருக்கவேண்டும்.

கோயில் ஒரு
பள்ளிக்கூடமாகத்
திகழவேண்டும்.

# நோக்கம்

நோக்கம் ஓராண்டாயிருந்தால்,
பூக்களை வளர்ப்போம்.

நோக்கம் பத்தாண்டாயிருந்தால்,
மரங்களை வளர்ப்போம்.

நோக்கம் முடிவில்லாமலிருந்தால்,
மனிதகுலத்தை வளர்ப்போம்.

# பணிவு வேண்டும்

மிகப்பெரிய கடல். கடலருகே செல்கின்றோம். கடல் தனது அலையாகிய அன்புக் கரங்களை நீட்டிப் பணிந்து காலைத் தொட்டு வணங்கி நிற்கின்றது. மிகப்பெரிய கடலே நம்மை பணிகின்றது என்ற இறுமாப்புடன் கடலினூடே சென்றால் விளைவு விபரீதமாகும்.

அதைப்போலவே, பெரியோர் நம்மைப் பணிந்து நிற்கும் தருவாயில் அவர்களை மதியாமல் இருந்தால், விளைவு..?

RESPECT ELDERS ALWAYS !

# கோபம்

சத்குரு,

என்னை அமைதிப்படுத்து. என் கோபத்தை என்னிடமிருந்து விலக்கு. என் வலிமை எனக்குத் தெரிகின்றது. இதன்பொருட்டு இதை உயர்வாக நினைத்து நான் யாரையும் தண்டிக்கவிரும்பவில்லை. என் ரௌத்திரத்தை பிறரைத் தண்டித்துக் குறைத்துக் கொள்ள விரும்பவில்லை. வலிமை உள்ளவன் கோபமுள்ளவனாக இருத்தல் கூடாது. எனக்கு வலிமையை அளித்தவனே, நெஞ்சுரம் கொடுத்தவனே, எனக்கு அமைதியைக் கொடு. யார் மீதும் எனக்கு நிரந்தர கோபமில்லை. இது நிச்சயம்.

சத்குருவே நமக!

# சேவை பெரிது

இப்ராஹிம் பின் அத்ஹம் என்ற ஒரு இஸ்லாமிய மகான் இருந்தார். மாமன்னராக விளங்கிய அவர் இல்லற வாழ்வைத் துறந்து துறவியானார். ஒரு முறை தன்னுடைய சீடர்களை அழைத்துக்கொண்டு வெளியூர் பயணம் மேற்கொண்டார். அப்போது ஒரு நாள் இரவில் பள்ளிவாசல் ஒன்றில் தங்க நேர்ந்தது.

அந்தப் பள்ளிவாசல் பழைய கட்டிடமாக இருந்தது. அதிலிருந்து ஒரு துவாரத்தின் வழியே வீசிய பனிக்காற்றால், சீடர்கள் அவதியுற்றனர். உடனே மகான் இப்ராஹிம் எழுந்து, அந்த துவாரத்துக்கு மறைவாக இருக்கும்படி தன் முதுகை அடைத்தவாறு நின்று கொண்டார். பனிக்காற்றின் பாதிப்பு துறவியைத் தாக்கியது. மற்றவர்கள் அமைதியாக தூங்கினார்கள்.

அப்படி நின்று கொண்டிருந்ததால், துறவி தொழுகை செய்ய முடியாமல் போனது.

அந்த உறுத்தலில் இரண்டு நாள் தொழுகை தவறி விட்டதை எண்ணி மகான் மிகவும் வருந்தினார்.

மூன்றாவது நாள் ஒரு அசரீரி கேட்டது. "இப்ராஹிம் ! நீர் இரண்டு நாட்களுக்கு முன் செய்த பின்னிரவு தொழுகை கடவுளுக்கு மிகவும் பிடித்து போய்விட்டது."

"ஐயோ ! நான் தொழவே இல்லையே ! என்றார் இப்ராஹிம்."

"அன்று நீர் செய்த சேவையே இறைவனுக்கு மிகவும் பிடித்த சிறப்பு தொழுகை !" என்றது அசரீரி

## SERVICE TO DEVOTEES PLEASES THE LORD

# நல்ல மனம் வேண்டும்

மகாபாரதத்தில் வரும் நந்திதேவன் என்ற மன்னனின் கதை நம்மில் பலருக்குத் தெரிந்திருக்காது. அந்த மன்னன் காட்டுக்குச் சென்று தவம் செய்தான். நாற்பத்தொன்பது நாட்களுக்குப் பிறகு இறைவன் அவன் முன்னால் தோன்றி "உனக்கு என்ன வேண்டும்? கேள், உன் ராஜ்யத்தை விடப் பெரிய ராஜ்யம் வேண்டுமா ?" என்று கேட்க, "வேண்டாம்" என்கிறான் நந்திதேவன். 'ஞானிகள் விரும்புகிற பிறவாத வரம் வேண்டுமா"? "என்று இறைவன் கேட்க அதற்கும் "வேண்டாம்" என்கிறான் மன்னன். "அப்படியென்றால் சொர்க்கத்தில் இடம் வேண்டுமா" என்று இறைவன் கேட்க மன்னன் "அதெல்லாம் வேண்டாம் அடுத்தவர் துன்பத்தைப் பார்த்தால் பதை பதைத்து அவர்களுக்கு உதவ நினைக்கும் மனதை எப்போதும் எனக்குக் கொடு" என்றான்.

அந்த ஈர மனதை இறைவன் அந்த மன்னனுக்கு மட்டுமல்ல, நம் எல்லோருக்குமே கொடுத்திருப்பதாக நம்புவோமாக.

# அன்னியோன்யம்

தாய், தந்தை, குழந்தைகளுக்கு இடையே அன்னியோன்யத்தை வளர்க்க கிறித்துவ மதம் சொல்லும் யோசனை:

“தினமும் இரவு படுக்கப் போவதற்கு முன்பு எந்தக் குடும்பம் ஒன்றாக அமர்ந்து பிரார்த்தனை நடத்துகிறதோ அந்தக் குடும்பம் கடைசி வரை ஒன்றாக இருக்கும்.”

# அயலானுக்கும் அன்பு காட்டு

மதத்தின் பெயரால் நடக்கும் கலவரங்கள், சண்டைகள், போராட்டங்களை... எல்லாம் பார்க்கும்போது மதம் என்ற ஒன்று தேவை தானா? என்ற எண்ணம் எழுகின்றது.

கலவரத்தையும் குழப்பத்தையும் உண்டுபண்ணப் பிறந்தது அல்ல மதம் ! அமைதியைக் கொடுப்பதற்காக உருவாக்கப்பட்டது அது ! மனிதர்களைப் பிரிப்பதற்காக உண்டாக்கப்படவில்லை மதம் ! மனிதர்களை ஒன்றுபடுத்துவதற்காக ஏற்படுத்தப் பட்டதுதான் அது ! எந்த மதமாக இருந்தாலும் அவை ‘அயலானுக்கும் அன்பு காட்டு’ என்றுதான் போதிக்கிறது. இந்த ஒற்றை வாக்கியம்தான் கீதை, குரான், பைபிள்... என்று எல்லா மதங்களின் வேதத்திலும் வெவ்வேறு வார்த்தைகளில் இருக்கிறது.

எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, “சக மனிதர்களை நான் நேசிப்பேன் ! அவர்களிடத்தில் அன்பு காட்டுவேன் ! ” இப்படி ஒரு சபதத்தை நாம் ஒவ்வொருவரும் ஏற்றுக் கொண்டால்... மதத்தின் பெயரால் மட்டும் இல்லை... ஜாதி, இனம் என்று எந்தக் காரணம் கொண்டும் பிரச்சினைகள் தலைதூக்காது. !

பக்குவப்பட்டவர்களுக்கு மதம் என்பது நட்பு வளர்க்கும் சாதனம். அல்லாதவர்களுக்குத்தான் அது சண்டை வளர்க்கும் ஆயுதம்.

# எந்தப் பெருமையும் சேராது

சீனப்பேரரசர் வூ என்பவர் புத்த மதத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். புத்த துறவியான போதி தர்மர் ஒரு முறை அரண்மனைக்கு வந்தார். அவரைச் சிறப்பாக வரவேற்றார் பேரரசர்.

துறவியை வணங்கிய அவர் "நான் புத்தருக்குப்பல கோயில்கள் கட்டியுள்ளேன். புத்த மத நூல்களை நன்றாகப் படித்துள்ளேன். புத்த மதத்தில் நான் பலரைச் சேர்த்துள்ளேன். இவ்வளவு நல்ல செயல்கள் செய்த எனக்கு என்ன சிறப்புகள் கிடைக்கும்? தாங்கள்தான் சொல்ல வேண்டும்" என்று கேட்டார்.

அதற்குத் துறவி, " 'நான்' என்ற ஆணவம், 'நான் தான் செய்தேன்' என்று தற்பெருமை உள்ளவரை எவ்வளவு நல்ல செயல்கள் செய்தாலும் ஒருவனுக்கு எந்தப் பெருமையும் வந்து சேராது" என்று பதில் தந்தார்.

# ஆசிரியர் பாரபட்சமில்லாதவர் ஒரு சூரியனைப் போல

துரோணரின் மகன் அஸ்வத்தாமன். ஆனாலும், தன்னைப் பிரதான சீடனாக ஏற்காமல், அர்ஜூனனை ஏற்றுக்கொண்டாரே என்று தன் தந்தை மீது வருத்தம். இதை நேரடியாகத் தந்தையிடம் கேட்டான்:

'என்னைவிட அர்ஜூனனுக்கு நீங்கள் அதிகமாகச் சொல்லித் தரவில்லை என்பது உண்மையானால், அவன் என்னைவிடத் திறமைசாலியாக இருப்பது எப்படி?'

'நான் என்னவோ உங்கள் அனைவருக்கும் ஒரே மாதிரிதான் பாரபட்சமில்லாமல் வித்தைகளைச் சொல்லிக்கொடுத்தேன். ஆனால், அவனோ உங்களை விட அதிகமாக நன்றாகவே கற்றுக்கொண்டான். சொல்லப் போனால், உங்களுக்குப் பாடம் எடுப்பதை மறைந்திருந்து கவனித்த ஏகலைவன் உங்கள் அனைவரை விடவும், அர்ஜூனனை விடவும், ஏன்... என்னை விடவும் அதிகமாக என்னிடமிருந்து கற்றுக்கொண்டான்' என்றார் துரோணர்.

சொல்லிக்கொடுப்பது ஒரே மாதிரியானாலும், முயற்சியையும் பயிற்சியையும் பொறுத்தே ஒரு மாணவனின் திறமை நன்கு வெளிப்படுகின்றது.

# வெற்றியை விட தியாகமே சிறந்தது

சியாட்டில் நடந்த சிறப்பு ஒலிம்பிக்கில் உடல் ஊனமுற்ற சிறுவர் சிறுமியருக்கான ஓட்டப்பந்தயத்தில் 9 பேர் கலந்து கொண்டனர்.

வேட்டுச்சத்தம் கேட்டவுடன் 9 பேரும் ஓடத் தொடங்கினர். அப்போது தொடங்கிய இடத்திலேயே மணலில் கால் தடுக்கி ஒரு சிறுவன் உருண்டு விழுந்து “ஐயோ” என்று அலறினான்.

சிறிது தூரம் ஓடிய மற்ற 8 பேரும் வேகத்தை குறைத்துத் திரும்பிப் பார்த்தனர். கீழே விழுந்தவன் அழுவதைக்கண்டு அனைவரும் ஓடி வந்த வழியிலேயே திரும்பி வரத் தொடங்கினர்.

தொடக்கத்திலேயே விழுந்து விட்ட அவனருகில் வந்த ஒரு சிறுமி குனிந்து, அவன் கன்னத்தில் முத்தமிட்டு எழுப்பினாள். “இப்போது எல்லோரும் ஓடலாம். நீயும் தயாரா ?” என்று கேட்டாள்.

உடனே அந்த 9 பேரும் கைகோர்த்துக் கொண்டு, ஓடு களத்தில் ஒன்றாகச் சேர்ந்தே மெதுவாக நடக்கத் தொடங்கினர். அனைவரும் ஒன்றாகவே பந்தயத்தில் பங்கேற்று ஒன்று சேர்ந்து நடந்து எல்லைக் கோட்டை நோக்கி முன்னேறியதைக் கண்ட பல்லாயிரக் கணக்கான பார்வையாளர்களின் மகிழ்ச்சி ஆரவாரம், அவர்கள் எல்லைக் கோட்டை தொட்ட பிறகும் தொடர்ந்தது.

*ஒரு விளக்கு மற்றொரு விளக்கை*
*ஏற்றுவதால் ஒளியை இழந்துவிடுமா என்ன?*

# பார்வையில்லாதவர்

வியாதி, வயோதிகம்
மகளுக்குக் கல்யாணம்
தொலைந்த உடைமைகள்...
பொய் ஆயிரம் சொல்லி
பரிதாபம் விற்றுக் காசு பார்க்காமல்
நீண்ட அலுமினியக்குச்சி
கருப்புக் கண்ணாடியுடன்
ஓடும் ரயிலிலும் தடுமாறாமல்
பிளாஸ்டிக் கவர், பேனா,
பென்சில் விற்கும் அந்த மனிதனைப்
பார்க்கும் போதெல்லாம்
ஏதேனும் வாங்குங்களேன்
நீங்களும்.

# கடன்

உலகத்தில் மனிதனுக்கு வந்திருக்கிற நோய்களில் மிகவும் கொடூரமானது எது தெரியுமா? நிச்சயமாக கேன்சரோ அல்லது மற்றதோ அல்ல. கடன்! இந்த மூன்றெழுத்து கொண்ட விஷக் கிருமியால் மனிதனுக்கு ஏற்படுகின்ற மனமாற்றம் இருக்கிறதே, அதுதான் மிகவும் கொடூரமான நோய்.

கடன் என்பது ஒரு
அடித்தளமில்லாத கடல்.

# WILL POWER

பரிமளா பட்டோலி என்ற பெண்மணி இமயமலையில் உள்ள ஒரு சிகரத்தைத் தன் குழுவினரோடு சேர்ந்து சென்று தொட்டுவிட்டுத் திரும்பியுள்ளார். இவருக்கு மணமாகி இரண்டு குழந்தைகளும் உள்ளார்கள் - இதுவும் அதிசயமாகத் தோன்றவில்லையா - இதைக் கேளுங்கள் இவர் ஒரு பார்வையற்ற பெண்மணி!

கயிற்றைப் பிடித்துக்கொண்டு அந்த பனிமலையில் ஏறியதைச் சற்றே நினைத்து பாருங்கள் - அதிசயம் புரியும்.

என்ன ஒரு மன உறுதி !
என்ன ஒரு தன்னம்பிக்கை !

முயற்சியும் பயிற்சியும் இருந்தால்
**GUINNESS** - ம் அருகில் தான் !!

# தைரியசாலிக் குழந்தைகள்

வாணியம்பாடி பக்கத்தில் உள்ள வெங்கடசமுத்திரம் என்ற குக்கிராமத்தைச் சேர்ந்த சிறுமிகள் கவிதாவும், சுகுணாவும். பதிமூன்று வயது. பள்ளிக்கூடம் போவதற்கு பஸ் வசதி கிடையாது. ஆற்றைக் கடந்துதான் 5 கிமீ தூரத்தில் உள்ள கரும்பூர் ஸ்கூலுக்குப் போக வேண்டும். ஒரு மழை நாளில் ஸ்கூல் முடிந்தவுடன் ஆற்று வழியாக வந்திருக்கின்றார்கள். இவர்கள் ஆற்றைக் கடந்ததும் திரும்பிப் பார்த்தால் பயங்கர வெள்ளம்... அதில் இவர்கள் பள்ளியில் படிக்கும் மூன்று மாணவர்கள் சிக்கியிருக்கின்றார்கள். இதைக்கண்ட உடனே எதைப்பற்றியும் யோசிக்காமல் மிகுந்த மனோ தைரியத்துடன் தங்களது உயிரைப் பற்றி சிறிது கூட கவலைப் படாமல் சட்டென்று ஆற்றிலே குதித்து சிரமத்துடன் மூன்று பேரில் இரண்டு பேரை காப்பாற்றிவிட்டர்கள்! இவர்களின் தைரியம் போற்றப்படவேண்டும் என்று கருதுபவர்களுக்கு ஒரு செய்தி:

"கவிதாவிற்கும் சுகுணாவிற்கும் நீந்தத் தெரியாது"

இவர்களின் வீர தீரச் செயலுக்காக அரசு விருது வழங்கி கௌரவித்திருக்கிறது.

நம்மையும் மற்றவர்கள் பாராட்டும் நாள் விரைவில் வரட்டும்.

# முயல்

முயல் தூங்கும்,
முயல் - ஆமைக்கதையில்
வேண்டுமானால்
ஆமை ஜெயிக்கலாம்.

முயலாமல் தூங்கும் - நம்
முயலாமையில் எதையும்
ஜெயிக்க முடியாது.

முயல், முயல்
வெற்றி வேண்டுமெனில்
முயல் !

# முயற்சி

எந்த முயற்சியும் செய்யாமல்
கடவுள் மீது பாரத்தைப்
போட்டுவிட்டு சும்மா
இருக்கலாமா...?

VERY SORRY !

ஒரு சின்னப் பறவைக்குஞ்சு
கூட முட்டையை மெனக்கெட்டு
உடைத்துக் கொண்டுதான்
வெளியே வந்தாக வேண்டும்.

# பொறுப்புணர்ச்சி

நோபல் பரிசு பெற்ற இந்திய விஞ்ஞானி சர்.சி.வி. ராமன். அவருக்கு உதவியாளர்கள் தேவைப்பட்டது. அதற்கான நேர்முகத்தேர்வு நடத்தினார்.

ஒரு இளைஞன் வந்தான்.

“உனக்கு விஞ்ஞானத்தில் ஈடுபாடு உண்டா? அதைப் பயின்றிருக்கிறாயா?”

“அதில் எனக்குப் பயிற்சி இல்லை ஐயா!” என்றான் இளைஞன்.

“விஞ்ஞான அறிவு இல்லாதவனை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது?” என்ற சர்.சி.வி. ராமன் “நீ போகலாம்” என்றார்.

அவன் ஏமாற்றத்துடன் வெளியேறினான். தற்செயலாக வசாற்புறத்தை நோக்கிய சர்.சி.வி. ராமன், வாசலில் அந்த இளைஞன் நடந்து கொண்ட முறையைக் கவனிக்க நேர்ந்தது.

மீண்டும் அவனை அழைத்து, “நீ வேலையில் சேர்ந்தாயிற்று” என்றார்.

காரணம் ? வசாற்புறத்தில் அவன் கண்ணில் பட்ட குண்டூசியை எடுத்துப் பொறுப்பாக ஒரு இடத்தில் வைத்து விட்டு நகர்ந்தான்.

ஏமாற்ற நிலையிலும் அவனுடைய பொறுப்புணர்ச்சி அவரைக் கவர்ந்ததால், வேலை போட்டுக் கொடுத்து விட்டார்.

விஞ்ஞான அறிவை விட பொறுப்புணர்ச்சிதான் அதிக தகுதி என்று கருதினார், அந்த நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி.

# ஒரு பழைய சீனக் கதை

கோடாலியை தொலைத்துவிட்ட ஒரு சீனன், பக்கத்துவீட்டுப் பையன் தான் அதை திருடியிருக்க வேண்டும் என்று முடிவு செய்தான்.

அந்தப் பையனையே கவனித்தான்.

அவன் பார்வை திருட்டுப் பார்வையாக இருந்தது.

அவன் பேச்சு திருட்டுப் பேச்சாக இருந்தது.

அவன் நடை திருட்டு நடையாக இருந்தது. அவன் செய்கை அனைத்தும் திருட்டுத் தனமாக இருந்தது.

ஆனால், மறுநாளே கோடாலி தன் வீட்டிலேயே ஒரு மூலையில் இருந்தது தெரிந்தது அவனுக்கு.

இப்போது அந்த பக்கத்துவீட்டுப் பையனை கவனித்தான்.

அவன் நடை, பேச்சு, பார்வை எல்லாமே மிக நல்லவன் போல் அவனுக்கு தெரிந்தது.

# இடுக்கண் வருங்கால் நகுக

வானவெளி மேகமூட்டங்களால் இருட்டிக்கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்தில் எப்படியும் மழை கொட்டப் போகிறது அதைப் பற்றி அந்தச் சிறுமிக்கு கவலையில்லை. வழக்கம் போல் புத்தகப் பையை தூக்கிக்கொண்டு பள்ளிக்குக் கிளம்பிவிட்டாள்.

அவள் புறப்பட்ட சில நிமிடங்களிலேயே வானம் பொத்துக்கொண்டு கொட்டவும், வீட்டிலிருந்த தாய் கலங்கிப் போனாள். இடி சத்தம் காதைப் பிளந்தது, மின்னல் கீற்றுகள் வானைக் கிழித்து, கண்களை கூசவைத்தன. 'பாதிவழியில் மகள் மாட்டிக்கொண்டிருப்பாளே' என்று தாய் பரிதவித்து ஒரு குடையை எடுத்துக்கொண்டு விரைந்தாள்.

மழையில் நனைந்தபடியே தூரத்தில் மகள் போய்க்கொண்டிருந்தது தெரிந்தது. ஒவ்வொருமுறை வானம் மின்னும்போதும் அதைப் பார்த்து சிரித்துவிட்டு போனது தாய்க்கு வினோதமாக தோன்றியது.

மகள் அருகில் சென்றவள், "எதுக்கு ஒவ்வொரு முறை வானம் மின்னும் போதும் அதைப் பார்த்து சிரிச்சுட்டுப் போறே?" என்று கேட்டாள்.

மகள் சொன்னாள்: "கடவுள் என்னை போட்டோ எடுத்துக்கிட்டிருக்கார். நான் அதுல அழகாக விழ வேணாமா?"

நீதி : கஷ்டங்களைச் சந்திக்கும்போது கடவுள் உங்களை ஆசீர்வதிக்கக்கூடும். அப்போது சிரிக்க மட்டும் மறந்துவிடாதீர்கள்.

# திருப்தியில் வாழ்தல்

நான் ஐந்தாவது படித்துக் கொண்டிருந்தேன். பள்ளி போய் வருவதற்கு ஸ்டான்டர்டு கார் வரும்.

மிகவும் பழைய மாடல் அது. நண்பர்கள் கிண்டல் பண்ணுவார்கள். மூட்டைப்பூச்சி கார் வந்துவிட்டது என்று. மிகவும் வருத்தப்பட்டு அம்மாவிடம் சென்று: அம்மா ! அப்பாவிடம் தான் நிறைய கார் இருக்கிறதே, எனக்கு வேறு கார் அனுப்பினால் என்ன ? இந்தக் காரில் போக எனக்குக் கூச்சமாக இருக்கிறது, நண்பர்களின் பரிகாசத்தை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

மறுநாள் அப்பா என்னை அழைத்து, "உன்னுடைய வகுப்பில் படிக்கும் மாணவர்கள் ஸ்கூலுக்கு எப்படி வருகின்றார்கள் எனக் கேட்டார்.

பஸ், ஸ்கூட்டர், ஆட்டோ, பைக், கார், சைக்கிள், ஸ்கூல் பஸ், வேன், நடந்து என சொன்னேன். அப்பா கேட்டார் : "உன்னையும் சேர்த்து காரில் வருபவர்கள் எத்தனை பேர் ?"

"மூன்று" என சொன்னேன். 41 பேரில் 2 பேர் உன்னைவிட அதிர்ஷ்டசாலிகள். காரில் அதிலும் நல்ல மாடல் காரில் வருகிறார்கள். ஆனால் மீதி 38 பேர் உன்னைவிட சாதாரண நிலையில் உள்ளார்கள், அதனால் அவர்களைவிட நீதான் அதிர்ஷ்டசாலி. அப்படி நினைத்து விட்டாயானால் உனக்கு எந்த ஏக்கமும் வராது, புரிந்ததா? புரிந்தது என்றேன். கடவுள் கொடுத்ததை வைத்துக் கொண்டு திருப்தியில் வாழ வேண்டும் என்று புரிந்தது.

# பிராணாயாமம்

பிராணாயாமம் அல்லது ஏதேனும் ஒரு ஒழுங்கான மூச்சுப் பயிற்சி செய்கிறவர்கள் திடசாலிகள். யோகிகள் காற்றைக் கட்டினால் மனத்தைக் கட்டலாம் என்பது யோகசாரம். கோபம், தாபம், பசி இவை வரும்போது மூச்சுக் காற்றைக் கவனியுங்கள். அது தாறுமாறாகப் போய்க்கொண்டிருக்கும்! உணர்ச்சி வசப்பட்டால் காற்று அலைபாயும். மாறாகக் காற்றை நேராக்கினால் உணர்ச்சி நேராகி, மனம் நேராகி வலிமை பெறும். இது மன வலிமைக்கான வழி.

காற்றின் வலிமை பற்றி சந்தேகம் வேண்டாம். மூட்டை தூக்கும் தோழரைப் பாருங்கள், மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு 100 கிலோ அரிசியை அப்படியே தூக்குவார். கீழே போட்டதும் பெரிய மூச்சு விடுவார். அவரா மூட்டையை தூக்கினார்? அவர் அடக்கி வைத்த காற்றுக்கு அவ்வளவு பலம் !

லாரியில் இரும்பு டன் டன்னாகப் போகிறது. எது தாங்குகிறது? லாரியா? டயரா? ட்யூபா? இல்லையில்லை ட்யூபில் இருக்கும் காற்றுதான் இத்தனை எடையையும் தாங்குகிறது!

காற்றை அடக்கினால் உடல் வலிமை, மன வலிமை.
ஏதேனும் பிராணப்பயிற்சி அவசியம் தேவை.

# ஒன்றும் இல்லை

மாவீரன் அலெக்சாண்டர் தனது சவப்பெட்டியைத் தயாரிக்கும் நேரம் வரும்போது தனது கைகள் இரண்டும் வெளியே தெரியும்படி அமைக்குமாறு கட்டளையிட்டார். அதற்குக் காரணமும் சொன்னார்:

உலகையே வென்ற அலெக்சாண்டர் உலகை விட்டுப் போகும்போது தன்னுடன் எடுத்துப் போனது எதுவும் இல்லை என்று உலக மக்கள் உணரட்டும்.

# மனிதன்

1. மரணம் நிகழும் கடைசி சில நிமிடங்களில் மனம் ஏங்குகிறது மனிதனாய் வாழ்ந்திருக்கலாமென்று........

2. இறந்தவன் இறுதிப்பயணத்தில் எத்தனை பேர் வந்திருக்கிறார்கள் என்று ஒரு முறை கண்களைத் திறந்துப் பார்த்தான். வாழ்ந்ததற்கு வருத்தப்பட்டு மறுபடியும் கண்களை மூடிக்கொண்டான்.

# விக்னம்

விக்ன விநாயகனே ! இன்று நான் செய்யப் போகின்ற செயல்கள் விக்னமில்லாமல் நிறைவேற அருள் புரிவாயாக !

ஒரு வேளை அச்செயல்களினால் எனக்கோ அல்லது மற்றவர்களுக்கோ இடையூறு ஏற்படும் என்று கருதினால், விக்னங்களை ஏற்படுத்தி அவைகளை நடைபெறாவண்ணம் தடைசெய்வாயாக! உன்னை நான் முழுவதும் நம்புகிறேன்.

# அடக்கமான தொண்டு

ஆலயமணி தலை கவிழ்ந்து உள்ளது. ஆனால் அதன் நாதம் தொலைதூரம் வரை கேட்கிறது. அதுபோல அடக்கமாகச் செய்யும் தொண்டு நெடுங்காலம் பயன் தரும்.

# சூரிய நமஸ்காரம்

பானோ பாஸ்கர மார்த்தாண்ட

சண்டரச்வின் - திவாகர,

ஆயுரா ரோக்கிய ஐச்வர்யம்

வித்யாம் தேஹி நமோஸ்துதே

# பக்தி மயமான சேவை

யோகமோ தத்துவ ஞானமோ, நூற்பயிற்சியோ தவமோ,துறவோ இவை எவையுமே பக்திமயமாக எனக்குச் சேவை செய்வதைப் போல என்னைத் திருப்தி படுத்துவதில்லை.

-ஸ்ரீமத் பாகவதம் 11/14-20

# மீண்டும் ஒரு பிறவி

உலகத்திலேயே மிகவும் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியது என்னவென்றால் அது மற்றவர்களை சந்தோஷப்படுத்துவதுதான். பிறருக்காக வாழும் நெறியான வாழக்கையும் தர்மம் செய்யும் நல்ல மனமும் கிடைத்துக் கொண்டேயிருக்குமானால், பகவானே எனக்கு மீண்டும் ஒரு பிறவியைக் கொடு.

# வரம்

இறைவனே !

உன்னை ஒன்று கேட்பேன்,

ஒரு வரம் தான் கேட்பேன்,

இந்தப் பிறவியிலும் சரி,

இனி நீ அளிக்கும் எந்தப் பிறவியிலும் சரி,

பிறருக்காக வாழும் வாழ்க்கையை எனக்குக் கொடு, அதற்குரிய அன்பு உள்ளத்தை எனக்குக் கொடு, அன்பே உருவான உன்னிடம் நான் வேறெதைக் கேட்க முடியும் !

# எதையும் வேண்டாத பக்தி வேண்டும்

ஸ்ரீபுரத்தில், ரத்ன சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த ஸ்ரீராஜராஜேஸ்வரியின் பாதமலர்களை மூடியபடி கோடி மலர்கள் குவிந்திருந்தன.

அம்பாளைத் தரிசிக்க வந்த துர்வாசர் - இக்காட்சியைப் பார்த்து அசந்து “அடேயப்பா ! எவ்வளவு மலர்கள் ! அம்மா, இவ்வளவு புஷ்பங்களால் உன்னை அர்ச்சித்த அந்த மகராஜன் யார் ? நீ குளிர்ந்துபோயிருப்பாயே !” என்றார்.

“மகரிஷி ! இப்பூக்களால் எவ்வளவு குளிர்ந்து போனேன் என்பதைக் காண உனக்கு விருப்பமாயிருந்தால் இந்த மலர்களை உன்கையால் விலக்கி என் பாதங்களைப் பார்” என்றாள் ஜகன்மாதா.

பூக்களை விலக்கிய துர்வாசர் ‘பகீர்’ என அதிர்ந்து போனார். காரணம்? பராசக்தியின் பாதங்கள் முழுவதும் கொப்புளங்கள்.. முத்து முத்தாக..

“தாயே.. இது என்ன அநியாயம் ? உன்மேனி புண்பட்டதே..? எப்படிப் புண்பட்டது ? யார் செய்தது இந்த அநியாயம்.?” துர்வாசர் பதறினார்.

“துர்வாசா.. இந்திரன் தான் என்னை இப்படிப் பூஜித்தவன் அவன் அர்ச்சித்த பூவிலும் பயங்கர வெப்பம்..பாதம் புண்ணாகியது !”

“பூவில் எப்படி வெப்பம் வரும் ? புரியும்படியாகச் சொல்லுங்கள், தாயே!” எனக்கேட்டார் முனிவர்.

“துர்வாசா..ஒவ்வொரு பூவையும் அவன் எனக்காகத் தரவில்லை. கோடானுகோடி ஆசைகள் அவனுக்கு. ஒவ்வொரு பூவிலும் ஒவ்வொரு ஆசையை வைத்து என் மீது அர்ச்சித்தான். இவை புஷ்பங்களா ? இல்லை, அவனது ஆசை வெப்பங்கள்.”

# எது புண்ணியம்

புண்ணியம் தேடக் கோவிலுக்குப் போகிறேன் என்று இங்கே நம்மவர்கள் கோவிலுக்குப் போய் திருக்குளத்தை அசிங்கப்படுத்துவதும், கோயிலின் பிரகாரங்களில் அமர்ந்து புளியோதரை, தயிர் சாதக்கட்டுகளைப் பிரித்து வைத்துக்கொண்டு ஓட்டல் மாதிரி அங்கேயே சாப்பிட்டு விட்டு வாழைப்பழத் தோலையும், சாப்பிட்டு எச்சில் இலைகளையும் கொஞ்சம்கூட குற்றவுணர்வே இல்லாமல் அங்கேயே போட்டு கோயிலையே குப்பைக் கூளமாக மாற்றி விடுவதும் எந்த வகையில் புண்ணியம் சேர்க்கும் என்று தெரியவில்லை.

பொது இடங்களைச் சுத்தம் செய்வது என்பதுதான் மிகச்சிறந்த திருப்பணி.

இனி யாராவது கோயில்களுக்கு ஏதாவது வேண்டுதல் என்று நேர்ந்து கொள்ள ஆசைப்பட்டால் “ஒரு நாள் முழுவதும் என் குடும்பத்தினரோடு வந்து கோயிலைச் சுத்தம் செய்கிறேன்” என்று நேர்ந்து கொள்ளுங்கள். அது மற்ற எல்லா வேண்டுதல்களையும் விட நிச்சயமாக அதிக பலனையும் புண்ணியத்தையும் தரும். மன நிம்மதியையும் தரும்.

# கல்வி தானம்

ஒவ்வொரு வருடமும்

ஒரு ஏழை மாணவனின்

படிப்பிற்காக உதவி

செய்வோமே

# கண் தானம்

உங்கள் விழிக்கு

உயிருண்டு என்றும்.

விழி தானத்திற்கு

வழி காணுங்களேன்!

# தினமும் ஒரு உதவி

ஏதாவது ஒரு வகையில் மற்றவர்களுக்குத் தினமும் ஒரு உதவி செய்வது உத்தமமான செயலாகும்.

மெனக்கெட்டுப் போய் தினம் யாருக்காவது உதவி செய்ய வேண்டும் என்பது கூட இல்லை; தெருவில் கிடக்கும் ஆணிகள், கண்ணாடித் துண்டுகள் யார் காலிலும் குத்தாமல் இருக்க, அதைத் தூர எறிந்தால் கூட புண்ணியம் தான் !

-ஸ்ரீ சங்கராச்சாரியார்

# ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி

# சங்கராச்சார்ய சுவாமிகள்

சுவாமிகளின் மீது மிகவும் பக்தியும் அன்பும் கொண்டிருந்த அன்பர் ஒருவர் ஒருநாள் அவரிடம் விண்ணப்பித்தார்: “நான் சுவாமிகளை என்றும் மறக்கக்கூடாது. நான் நினைத்தபோதெல்லாம் தாங்கள் வந்து எனக்கு அனுக்கிரஹம் பண்ண வேண்டும்”.

சுவாமிகள் அமைதியாகப் பதில் அளித்தார்:

“தினமும் ஒரு நல்ல காரியம் செய். அப்போதெல்லாம் நான் அங்கு இருப்பேன்”

# திருந்திய மனம்

ரமண மகரிஷியிடம் மிகுந்த பக்தி கொண்டு இருந்த அன்பர் ஒருநாள் அவரைத் தரிசித்து சொன்னார் :

“சுவாமி ! இதுநாள் வரை தீயவனாகவே இருந்து விட்டேன். இப்போது மனம் திருந்தி விட்டேன். இனிமேலாவது நல்லவனாக வாழ விரும்புகிறேன். என்ன உறுதிமொழி எடுத்துக்கொண்டு, நான் எனது புதிய வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டும்?”

பகவான் ரமண மகரிஷி சொன்னார் :

“இனிமேல் நான் பொய் சொல்ல மாட்டேன்.”

# மௌன மொழி

ஒரு சமயம் வினோபாஜீயை சில பத்திரிக்கை நிருபர்கள் பேட்டி எடுக்கச் சென்றனர். வினோபாஜீக்கு பல மொழிகள் தெரியும். அதை அறிந்த ஒரு நிருபர் அவரிடம்,

“தங்களை எந்த மொழியில் பேட்டி காணலாம்?” என்று கேட்டார்.

“எந்த மொழியில் வேண்டுமானாலும்” என்றார் வினோபாஜீ.

“தங்களுக்கு எந்த மொழியில் பதில் சொல்ல விருப்பமாக இருக்கிறது?” என்று மீண்டும் கேட்டார் அந்த நிருபர்.

நிருபர் தன்னுடைய நேரத்தை வீணாக்குகிறார் என்றுணர்ந்த வினோபாஜீ எரிச்சலுற்றார்.

அவர் அந்த நிருபரைப் பார்த்து, “எனக்குப் பிடித்த மொழி மௌனம்!” என்று கூறிவிட்டு எழுந்து சென்றுவிட்டார்.

# சத்தியம்

மனமும் வாக்கும் ஒன்றாக அமைவது சத்தியம். சத்தியத்தையே சொல்லிச் சொல்லிப் பழக்கம் செய்துவிட்டால் மனம் சத்தியத்தையே நினைக்கும்; வாக்கும் சத்தியத்தையே சொல்லும். அப்போது சொல்பவை சத்தியமாகவே இருக்கும்.

தவறி ஒன்றைச் சொல்லும் அந்த சொல் சத்தியமாகவே முடியும். உள்ளத்தில் உள்ளதையே, நினைப்பதையே சொல்லும் வாக்கு அப்படியே பலிக்கும். தவறிச் சொன்னாலும் அது நடந்துவிடும். வார்த்தை சித்தியாவது சத்தியத்தினால்தான்.

# மௌனம்

மௌனத்தை போன்ற ஒரு சக்தியைச் சேமிக்கும் சாதனம் உலகத்திலேயே வேறு எதுவும் கிடையாது. பேச்சு ஒரு சத்தம். சத்தம் அமைதிக்கு எதிரி. தவிர ஜீவ சக்தியில் பெரும்பகுதி பேசுவதாலேயே போய்விடுகின்றது. உடம்பின் சக்தி ஆதாரங்கள் தளர்ந்து போய்விடுகின்றன. எவர் பேச்சைக் குறைத்தாலும் அவர்களுக்குள் ஒரு ஜீவ சக்தி பெருகி அவர்களின் உடலைச்சுற்றி மின்காந்த அலைகளின் வீச்சு ஏற்படும். யோகமும் தவமும் அதைப்பன்மடங்கு அதிகரிக்கச்செய்யும். பல யோகியரை, ஞானியரைப் பார்த்த மாத்திரத்தில் நாம் கையெடுத்துக் கும்பிடக்காரணமே அந்த அலைகளின் செயல்பாடுதான்!

நாமும் மௌனம் பழகுவோமே !

# தாய்

உலகிலேயே மிகவும் அமைதியான இடம் எது?

**தாயின் மடி**

# சாதிப்பவள் தாய்

ஒரு நாள், காது சற்றுகேளாத நான்கு வயது சிறுவன் ஒருவன் தனது ஆசிரியர் எழுதிக் கொடுத்த குறிப்புடன் வீடு திரும்பினான். அவனது தாய்க்காக எழுதப்பட்ட அந்த குறிப்பில், “உங்கள் மகன் படிப்பதற்கு லாயக்கற்றவன், அவனைத் திரும்ப அழைத்துக்கொள்ளுங்கள்” என்று எழுதியிருந்தது.

அதைப்பார்த்த அந்தத் தாய் என் மகன் ஒன்றும் முட்டாள் இல்லை, அவனுக்கு நானே கற்பிக்கிறேன் என்று சொல்லி தன் மகனுடன் கூடவே இருந்து பொறுமையாக சொல்லிக் கொடுத்து நல்ல அறிவாளியாக ஆக்கினாள்.

அந்தக் காது கேட்காத சிறுவன்தான் பின்னாளில் ஒரு உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானியாக ஆனான். அவன் தான் **Thomas Alwa Edison.**

தாய் என்பவள் தனது குழந்தைக்காக எதையும் சாதிப்பவள்.

# ஒரு தாயின் சக்தி

வில்மா ரூடால்ஃப் என்ற சிறுமிக்கு நான்கு வயதில் நிமோனியா வந்து இடது கால் செயலிழந்து விட்டது. டாக்டர்கள் இனி "வாழ்நாள் பூராவும் அந்தக் காலை பயன்படுத்தமுடியாது" என்று கூறி விட்டனர். பிறகு ஒரு நாள் இரவு கண்கலங்கத் தன் தாயிடம் சென்று " இனி என்னால் நடக்க முடியாதாம்மா? என்றாள் வில்மா.

நெகிழ்ச்சியுடன் அவளை இறுக அணைத்துக்கொண்ட தாய், "அதையெல்லாம் நீ நம்பாதே. நான் சொல்கிறேன். நிச்சயமா உன்னால் நல்லா நடக்க முடியும். என் ? ரன்னிங் ரேஸ்கூட ஓடுவே" என்றாள். தாயை முழுக்க நம்பிய வில்மா, தன் காலில் சிகிச்சைக்காகப் பிணைக்கப்பட்டிருந்த இரும்பு வளையத்தைக் கழற்றி எறிந்து விட்டு தினமும் நடந்து பழகினாள். பள்ளியின் ஸ்போர்ட்ஸ் டேயில் கலந்து கொண்டு ஓடி கடைசியாகத் தான் வந்தாள். அம்மா பக்கம் திரும்பி பார்த்தால் கவலைப்படாதே! தொடர்ந்து ஓடு ஃபர்ஸ்ட் வருவே ! என்றே வார்த்தைகள் வருகிறது. வில்மா தன் தாயை பிடிவாதமாக நம்பி மறுபடியும் தொடர்ந்து ப்ராக்டிஸ் செய்தாள்.

1960 ஒலிம்பிக்ஸில் நூறு மீட்டர், இருநூறு மீட்டரிலும், நானூறு மீட்டரிலும், ரிலே ஓட்டப்பந்தயத்திலும் தங்க மெடல்கள் வாங்கும் வரை வில்மா விடவில்லை. தாய் என்கிற அந்த இரண்டெழுத்துக்கு ஒலிம்பிக்ஸ் சக்தி உண்டு!

# தாயை வணங்குவதால் கிடைக்கும் புண்ணியம் யாது?

ஆறுதரம் பூமியை வலம் வருதலும், ஆயிரம் தடவை, காசியில் குளித்தலும், நூறு தடவை சேது ஸ்நானம் செய்தலும் ஆகிய இவற்றால் கிடைக்கும் புண்ணியம் தாயை பக்திப் பூர்வமாக ஒரு தரம் வணங்கினாலே கிடைக்கும்.

# மேலான தவம் எது ?

தாய், தந்தை, குரு ஆகிய மூவரையும் மரியாதையுடனும் மகிழ்வுடனும் நடத்துவதைவிட ஒருவனுக்கு மேலான தவம் எதுவும் இல்லை. இவர்களை மீறிச்செய்யும் செயல்கள் பலன் அளிப்பதில்லை.

# தாய்

தாயினும் சிறந்த தெய்வம் இல்லையாமே, எதைப் போல?

உணவும், நீரும் தருகின்ற தானத்திற்குச் சமமான தானமும் இல்லை, ஏகாதசி விரதத்தைக் காட்டிலும் சிறந்த விரதமும் இல்லை, காயத்ரியை விடச் சிறந்த மந்திரமும் இல்லை, தாயினும் சிறந்த தெய்வமும் இல்லை.

# சிறந்த குழந்தைகள்

குழந்தைகளை
சிறந்தவர்களாக
வளர்ப்பது எப்படி?

நாம் சிறந்தவர்களாக
நடந்து காட்டுவது
ஒன்றுதான் அவர்களை
சிறந்தவர்களாக ஆக்கும்
சிறப்பான வழி.

# அப்பா

பெண் குழந்தை வளர்ப்பில் ஒரு அப்பாவின் முதல் கடமை என்ன?

பொதுவாகவே ஆண் குழந்தைக்கு அம்மாவிடமும், பெண் குழந்தைக்கு அப்பாவிடமும் அதிக ஈடுபாடும் ஒட்டுதலும் இருக்கும்.

ஒரு மகள் பிற்காலத்தில் தன் கணவனைத் தேர்ந்தெடுக்கும் போது ஆழ்மனதில் தன் அப்பாவைத்தான் மாடலாக வைத்துக் கொள்கிறாள்.

ஒரு சிறந்த ஆண்மகனை அவன் கணவனாகத் தேர்ந்தெடுக்க உதவும்படியான மாடலாக அப்பா இருந்தால் அது போதும்.

ஒரு குழந்தையை நல்லவிதமாக, கொள்கை கொண்ட மனிதனாக உருவாக்குவது மூன்று பேர் கைகளில்தான் உள்ளது. அம்மா, அப்பா, துவக்கப் பள்ளி ஆசிரியர் ஆகியோர்தான் அந்த மூவர்.

தான் எதிர்காலத்தில் என்னவாக உருவாக வேண்டும் என்பதற்குரிய எண்ணங்கள், கொள்கைகள், உந்துதல்கள் அனைத்தும் குழந்தைகளின் மனத்தில், அதன் பதினைந்து வயதிற்குள் உருவாகி விடுகின்றன. இந்தக் காலகட்டத்திற்குள், பெற்றோர்களும், ஆசிரியர்களும் ஒருமித்துச் செயல்பட்டு அவர்களுக்குச் சரியான பாதையை அமைத்துக் கொடுத்தால், உலகையே வியக்க வைக்கும் எழுச்சிமிகு பாரதத்தை உருவாக்கலாம்.

-A.P.J.அப்துல் கலாம்

# நேர்மை

ஒரு நேர்மையான அதிகாரி ஊழல் அதிகம் நிறைந்த ஒரு துறையில் இருக்க நேரிட்டால், நேர்மையானவராகவே தொடர்ந்து இருக்க இயலுமா?

கோவிலின் குருக்கள் எந்தத்தீயப் பழக்கங்களும் இல்லாமல் இருப்பது பெரிய விஷயமே இல்லை. ஆனால், சாராயக் கடைக்குப் பக்கத்தில் பெட்டிக் கடை நடத்தும் நபர் எந்த விதத்தீயப் பழக்கமும் இல்லாமல் இருப்பாரேயானால் அவர்தான் பாராட்டப்பட வேண்டியவர். கெட்டுப்போவதற்கு அதிக சந்தர்ப்பங்கள் இருந்தும் ஒருவர் கெடாமல் இருந்தால் அதுதானே சவால் ?

பேட்ஸ்மேனை நோக்கி வீசப்படும் ஒவ்வொரு பந்தும் அவரை ஆட்டத்திலிருந்து அவுட் செய்யப்படுவதற்காகவே வீசப்படுகிறது. அதே சமயம் ஃபோர், சிக்சர், செஞ்சுரி என்று ரன்கள் குவிக்க, சாதனைகள் படைக்க பேட்ஸ்மேனுக்குப் பயன்படுவதும் அதே பந்துதானே?

நம்முடைய அலுவலகத்தில், குடும்பத்தில் இப்படி எந்த இடத்தில் என்ன மாற்றங்கள் நடந்தாலும் சரி.. நாம் நினைத்தால் சோதனைகளைக் கூடச் சாதனைகளாக மாற்றிக்கொள்ள முடியும் ! சின்னச் சின்ன விஷயங்கள் கூட நமக்குள் சீரிய சிந்தனைகளை விதைக்க முடியும். எந்த விதமான சிக்கலான சூழ்நிலையிலும் நேர்மையாக நடந்து கொள்ள முடியும். பென்சிலையே ஒரு உதாரணத்துக்கு எடுத்துக் கொள்வோம். செதுக்குதல் என்பதோ சீவுதல் என்பதோ வலி நிறைந்ததுதான் என்றாலும், பென்சில் சீவப்பட்டால்தான் கூர்மையானதாக இருக்கும்.

நேர்மையை எந்தச் சூழ்நிலையிலும் கடைப்பிடிக்கவேண்டும்.

# தாகத்திற்காக கடல் நீரை அருந்தலாமா?

ஒரு நாள் ஒரு பெரியவரின் இல்லத்திற்குத் திருடன் ஒருவன் வந்தான். அவன் அங்கிருந்த பொருள்களைத் திருடிச்செல்ல முயன்ற பொழுது பிடிபட்டான்.

அவனை பெரியவர் விசாரித்தபொழுது, வறுமையின் காரணத்தாலேயே தாம் திருட முனைந்ததாக அவன் கூறினான். அது கேட்ட பெரியவர், “கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் எத்தகைய தாகம் ஏற்படினும், அதனைத் தணித்துக்கொள்ள கடலின் நீரை அருந்த மாட்டார்கள் என்பதை அறிவாயா ?” என்று வினவ,

“ஆம் ! அறிவேன்” என்று அவன் பதிலளிக்க

“ஏன் ?” என்று பெரியவர் மீண்டும் வினவ,

“அது உப்பு நீரல்லவா? அதனை எவ்வாறு அருந்த முடியும்” என்று வினவினான் அவன்.

அது கேட்ட பெரியவர், “அதனால் மட்டுமல்ல. அதனை அருந்தினால் தாகம் தீராது. மேலும் அது பன்மடங்கு அதிகரிக்கவேச் செய்யும். அதே போன்று திருட்டு வருவாயில் தவறான வழியில் சம்பாதிப்பதில் அபிவிருத்தி இருப்பதில்லை. அது மட்டுமா, திருட்டு வருவாய் வறுமையின் வாயிலையும் திறந்து விடும்” என்று கூறி உபதேசித்து அனுப்பி வைத்தார்.

லஞ்சம் வாங்குவதும் இதே போல் தான்

# பாவத்தில் பங்கு

லஞ்சம் வாங்கும் அதிகாரி ஒருவர் பெரியவர்களைச் சந்தித்தார். "நியாயமற்ற வழியில் யாருக்காக சம்பாதிக்கின்றாய்" என பெரியவர் வினவ, என்னுடைய அருமை மனைவிக்காகவும் குழந்தைகளின் எதிர்காலத்திற்காகவும்.." என பதிலளித்தார் அந்த அதிகாரி.

"தவறான வழியிலே சேர்த்த பணத்தால் உனக்கு சேரும் பாவத்தில் அவர்கள் பங்கு பெறத்தயாரா? என்று அவர்களைக் கேட்டுப்பார் என பெரியவர் கூற,

"அதெப்படி, பாவங்களை நாங்கள் ஏற்க முடியும், அது உன் தலையெழுத்து, எங்களுக்கு என்ன?" என அலட்சியமாகப் பதிலளித்தனர் அருமை என நினைத்த மனைவியும், மக்களும்.

வசதியை மட்டும் அனுபவிக்கத்தயாராக இருக்கும் தன் குடும்பத்தினரின் சுயநலத்தைக் கண்கூடாக கண்டுகொண்ட, அந்த அதிர்ச்சியடைந்த அதிகாரி, செய்யும் பாவம் தன்னைவிட்டு என்றுமே போகாது என்பதைப் புரிந்துகொண்டார்.

# அருள் வாக்கு

கோவில்களின் சூழ்நிலை மிக அமைதியாக அழகாக, மிகத் தூய்மையாக இருக்க வேண்டும். பகவத் ஸ்மரணை தவிர மற்ற நினைவுகள் மறந்து விடும்படியாக இருக்க வேண்டும். சுற்றுப்புற சூழலானது நாம் பகவானின் மீதுள்ள பக்தியை அதிகமாக்கும்படி அமைந்திருக்க வேண்டும். ஆலயங்களின் உட்புறமும் சூழ்நிலையும் அமைதியாகவும் சுத்தமாகவும் இல்லாதவரையில் ஆஸ்திக காரியங்கள் எத்தனைதான் நடந்தாலும், எத்தனை கும்பாபிஷேகங்கள் நடந்தாலும் நாம் திருப்திப்படுவதற்கில்லை. கும்பாபிஷேகத்துக்கு அப்புறம் சாந்நித்யம் நிலைத்திருக்க வழி பண்ணாவிட்டால் என்ன பிரயோஜனம் ?

ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

# அடக்கமான சேவை

ஓரிடத்தைச் சுத்தம் செய்துவிட்டு எந்தவித விளம்பரமும் இல்லாமல் விளக்குமாறு மூலைக்குச் சென்று விடுகிறது. உண்மையான பக்தன் ஒருவன் எல்லாச் சேவைகளையும் செய்து விட்டு தனக்கென விளம்பரம் ஏதும் எதிர்பாராமல் தன்னடக்கத்தோடு ஒதுங்கிக் கொண்டு விடுவான்.

மூலையில் வைத்தாலும் மீண்டும் ஓரிடத்தைச் சுத்தம் செய்வதற்கு இந்த விளக்குமாற்றைத் தேடி எடுத்துப் பயன்படுத்துவது போல, தேவைப்படும் போது தன்னலமில்லா சேவை மனப்பான்மை உள்ளவர்களை மட்டுமே இறைவன் தேர்ந்தெடுத்துக் கொண்டு தன் பணியை முடித்துக் கொள்கிறான்.

-சாரதாதேவி

# சரணாகதி

எல்லாம் இறைவன் செயல் , அவனன்றி ஓரணுவும் அசையாது என்ற நம்பிக்கை தான் அந்த சரணாகதி.

ஒரு கதை:

அனந்தாழ்வான் ஒரு வைணவ அடியவர் . திருப்பதியில் தினமும் குளத்தில் நீராடி , சோலையில் மலர்கள் பறித்துச் சென்று பெருமாளை வழிபடுவார் . பெருமாளின் சேவையன்றி , வேறொன்றும் அறியாத பரிபூரண பக்தர் அவர் . ஒருநாள் ஒரு பாம்பு அவரைத் தீண்டிவிட்டது . வலியைப் பொறுத்துக்கொண்டு , மலர்க் கொய்து முடித்து , குடலையில் இட்டு எடுத்துக் கொண்டு பெருமாள் கருவறைக்குச் சென்றார் . வழியில் அவரை சந்தித்தவர்கள் அவர் காலிலிருந்து ரத்தம் கசிவதைக் கண்டார்கள்." என்ன ஆச்சு ? " என்று பதறினார்கள்.

" பாம்பு கடித்துவிட்டது " என்று நிதானமாகச் சொன்னார், அனந்தாழ்வான்.

" அடப்பெருமாளே! அது விஷப் பாம்போ என்னவோ ? உடனே சிகிச்சை எடுத்துக் கொள்ளக்கூடாதா ? " என்றனர்

" வேண்டாம் " என்ற அனந்தாழ்வான் மேலும் நிதானமாகச் சொன்னார். " கடித்தது சாதாரண பாம்பாக இருந்தால் இதோ நான் என் பெருமாளை அவர் கோயிலில் தரிசிப்பேன் . அது விஷப்பாம்பாக இருந்தால் அவரை நேரடியாக வைகுந்தத்திலேயே தரிசிப்பேன் ! "'

இதுதான் சரணாகதி . கொஞ்சமும் சந்தேகம் இல்லாத , அப்பழுக்கில்லாத பரிபூரண சரணாகதி .

# ஆண்டவன் சேவையில் ஆணவம் கூடாது

மிகக் கோலாகலமாக நிறைவடைந்தது ஸ்ரீராம பட்டாபிஷேகம் . எல்லோருக்கும் அவரவர்கள் கேட்டவற்றையெல்லாம் வாரி வழங்கிக் கொண்டிருந்த ராமன் முன், கைகூப்பி பணிவுடன் கேட்டான் அனுமன்: " பிரபோ ! எனக்கொரு வரம் வேண்டும் "

“பிரபோ ! நான்தான் அன்னை சீதையைக் கண்டு வந்தேன் என்ற தகவல் எல்லா வானரங்களுக்கும் , ஜாம்பவானுக்கும் உடனடியாக மறந்துபோய்விட வேண்டும். அப்போதுதான் அவர்கள் முன்போல் என்னுடன் நட்புடன் பழகுவார்கள். வேண்டாத மரியாதை அப்போதுதான் அவர்களிடமிருந்து விலகும். அதோடு , நான்தான் அன்னையைக் கண்டுபிடித்தேன் என்று செய்தியை நானும் மறந்துவிட வேண்டும். அந்த நினைவு இருந்தால் ' எப்படிப்பட்ட சாதனையை நான் செய்தேன் ' என்ற எண்ணம் என் மனதில் எதிர்காலத்தில் ஆணவத்தைத் தோற்றுவிக்கலாம்."

“பிரபோ ! நான் என் வாழ்நாள் முழுவதும் உங்களின் எளிய தொண்டனாக மட்டுமே வாழ விரும்புகிறேன் . நான் ராம பக்தன் . என் அடையாளம் அது மட்டுமே . ஏதோ ஸ்ரீராம பிரபுவுக்கு நான் மகத்தான உதவி செய்துவிட்டேன் என்று யார் எண்ணினாலும் அது சரியல்ல . உங்கள் அருள் எனக்கிருந்தால் மட்டுமே அன்னை சீதையைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது . அவ்வளவே , நான் கேட்க விரும்பும் வரம் இதுவே !”

சீதை அனுமனை மிகுந்த வியப்போடு பார்த்தாள் ! " அனுமன் எவ்வளவு அழகான குண நலன்களோடு திகழ்கிறான் ! இப்படியொருவன் எனக்கும் என் கணவருக்கும் தொண்டனாகக் கிடைக்க நாங்கள் என்ன பாக்கியம் செய்திருக்கிறோம் ! " என நெகிழ்ச்சிக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் .

" ஆண்டவன் சேவையில் ஆணவம் அறவே கூடாது " .

# சேவை பெரிது

பிரார்த்தனை செய்யுங்கள், கடவுள் அருகே நீங்கள் செல்லலாம்.

சேவை செய்து பாருங்கள், கடவுள் உங்களிடமே வருவார்.

# உன் சந்நிதி

பகவானே!

மந்திரமோ, தந்திரமோ, ஸ்தோத்திரமோ நான் அறியேன்.

ஆவாஹனமோ, தியானமோ செய்ய அறியேன்.

உன்னுடைய புகழைப் பாடவும் அறியேன்.

உனது பூஜா முத்திரைகளை அறியேன்.

எனக்கோ அழக்கூடத் தெரியாது.

ஆனால் உன் சந்நிதி வந்தடைந்தால் அது துன்பத்தையெல்லாம் போக்கும் என்ற உண்மை ஒன்று தான் தெரியும்.

-ஆதிசங்கரர்-

# ஒரு நொடி போதுமே !

அனுதினமும் உனைப் பாட, நான் ஆண்டாளும் இல்லை.

அவல் தந்து செல்வம் வாங்க, நான் குசேலனும் இல்லை.

எப்போதும் உன் நாமம் சொல்லித் திரிய, நான் நாரதனும் இல்லை.

எனது நெஞ்சைத் திறந்து உனைக் காட்ட, நான் அனுமனும் இல்லை.

மனதிலே உனை ஒரு நிமிடம் நினைத்து, மறுநிமிடம்

மறுவேலை பார்க்கும் சாதாரண மானிடப் பிறவியப்பா நான்.

என்துயர் போக்க பகவானே ... உனக்கு ஒரு நொடி போதுமே !

# VISION

WHERE THE VISION IS ONE YEAR,

CULTIVATE FLOWERS.

WHERE THE VISION IS TEN YEARS,

CULTIVATE TREES.

WHERE THE VISION IS ETERNITY,

CULTIVATE PEOPLE.

# NATION IS BIGGER

Once, the president of India Mr.A.P.J.Abdul kalam was asked by a class X girl what was his message for the students.

He told her that everyone should grow with the thought that

**THE NATION IS BIGGER**

**THAN THE INDIVIDUAL**

# 1999 KARGIL WAR HERO MAJOR SARAVANAN

Let us salute this valiant son of Tiruchirappalli who fought in kargil war and died for our Nation.

Major Saravanan [Age 28] led the first infantry unit into the Batalik Sector. He encircled the infiltrators lodged on the heights. He killed four of them in a hand- to – hand combat, before succumbing himself. His body laid untraced for almost $1\frac{1}{2}$ months because of heavy fighting in the region. It was recovered on July 9$^{th}$ and brought to Tiruchirappalli on July 11$^{th}$ 1999.

That was the first time in the history of Triuchirappalli, everybody irrespective of caste, creed and religion gathered together voluntarily for the funeral procession of this brave soldier. He was awarded “Paramvir Chakra’’ posthumously.

His father Mr. Mariappan also served in the army as Lt. Colonel and died on 19$^{th}$ June 1988.


(As a respect, Lawsons road and Royal road are named as “Major Saravanan Road”)

# IN GOD WE ALL MEET

In a circle with many radii, the further we move from the center the greater will seem the distance between one radius and another. As we move towards the center the distance will narrow down. At the center, all the radii meet.

The radii represent the different religions and the center is God.

The further we move from God, greater will seem the difference between one religion and another. The nearer we are to God, the closer we shall feel towards other religions. In God we all meet.



# TEACHER

There is a story about a king in ancient times who wanted to honour a person who made the greatest contribution to society. All kinds of people came, including doctors and entrepreneurs, and they all presented their cases for receiving the honour. The king was not impressed. Finally, an elderly person with a glow on his face walked in and said he was a teacher. The king came down from his throne and bowed to honour the teacher. It is the teacher who makes the highest contribution in shaping the future of society.

(TEACHER'S DAY: SEPTEMBER 5)

# TEACHING THE RIGHT VALUE

Many times, inadvertently and innocently, we end up teaching wrong values within our families.

For example, we tell our children to lie for us.

Tell them i am not here. We all look to our parents and teachers to teach us integrity and many times we are disappointed.

Practising these petty lies turns a person into a professional liar. When we ask others to lie for us, a day will come when they will lie to us too.

Don’t tell a lie

## EVERY SUCCESS STORY IS ALSO A

## STORY OF GREAT FAILURE

This was a man who failed in business at the age of 21 : was defeated in a legislative race at the age 22 : failed again in business at the age of 24 : overcame the death of his sweetheart at the age of 26 : had a nervous breakdown at the age of 27 : lost a congressional race at the age of 34 : lost a senatorial race at the age of 45 : failed in an effort to become the vice-president at the age of 47 : lost a senatorial race at the age of 49 : and was elected president of the United States at the age of 52.

This man was Abraham Lincoln.

Would you call him a failure?

He could have quit. But to Lincoln, defeat was a detour and not a dead end.

# DEDICATION

A polio victim at the age of five started swimming to regain strength. It was because of her desire to succeed that she went on to become a world record holder at the three events and won the gold at the 1956 Olympics at Melbourne. Her name is Shelly Mann.

When people lack purpose and direction, they see no opportunity. If a person has the desire to accomplish something, the direction to know his objective, the dedication to stay focused, and the discipline required to put in the hard work, then other things come easy. But if you don’t have them, it doesn’t matter what else you have.

Character is the foundation upon which all else is built.
It endures.

# ACHIEVEMENT

When somebody looks at my name and ask me if I am Hindu because I was born in a Hindu family. They would have called me a Christian if I was born in a Christian family or Muslim if I was born in a Muslim family.

It is not important what we are born as. What is more important is what we are and what we achieve.

When I leave this world, I would like to be known not as Hindu, not as a Christian or Muslim but, by what have achieved myself and what I have contributed to the society.

# SELF – RESPECT

Once Nehru came to Vijayawada.
Nehru was about to get into a car when he noticed a poor hungry boy.

Nehru went to him and gave two rupees and said, “Go and eat something.”

But the boy refused and said “I’ am not a beggar”

Nehru said, “I’ll buy you something to eat. In return, can you carry my bag to the congress office?”

The boy agreed. Nehru bought the boy a plate of idlis. As the boy ate, Nehru waited. Then the boy carried Nehru’s bag.

When the boy reached the office he placed the bag at the entrance and left. Nehru looked at the boy with pride. With tears in this eyes he said, “The country needs such people – people with self respect.”

# TRIFLES MAKE PERFECTION AND PERFECTION IS NO TRIFLE

If a man is called to be street sweeper, he should sweep streets even as Michelangelo painted, or Beethoven composed music, or Shakespeare wrote poetry. He should sweep streets so well that all the hosts of heaven and earth will pause to say,

“Here lived a great street sweeper who did his job so well”.

**செய்வதைத் திருந்தச் செய்வோம் !**

# HOW WOULD YOU LIKE TO BE REMEMBERED?

Once, a man looked at the newspaper and to his surprise and horror, read his name in the obituary column. The newspapers had reported the death of the wrong person by mistake. The obituary read, “Dynamite King Dies” “He was the merchant of death.” This man was the inventor of dynamite and when he read the words “merchant of death,” he asked himself a question, “Is this how I am going to be remembered?” He got in touch with his feeling and decided that this was not the way he wanted to be remembered. From then on, he started working towards peace.

His name was **Alfred Nobel** and he is remembered even today by the great Nobel Prize.

What is your legacy? How would you like to be remembered?

# EFFORT

YOUR EFFORTS

MAY FAIL

BUT DON’T FAIL

TO MAKE ANY

EFFORT.

# CLEAN

KEEP YOUR HOUSE CLEAN.

GOD IS WAITING TO ENTER.

# FAITH

Let the different faiths exist, let them flourish and let the glory of God be sung in all the languages and in variety of tunes.

That should be the ideal.

Respect the differences between the faiths and recognise them as valid as long as they do not extinguish the flame of unity.

# RELIGION

## DIFFERENT RELIGIONS

## DIFFERENT LANGUAGES

## DIFFERENT FOODS

## DIFFERENT CULTURES

## DIFFERENT NEEDS

## DIFFERENT DREAMS

# BUT ONE INDIA

# FAITH

Faith gives life, faith gives exaltation. Through genuine faith, one can accomplish anything. Complete faith and surrender are essential factors in the spiritual life. When we have them, all our troubles cease, not that they have been eliminated but we have risen above them.

# I MADE YOU

On the street I saw a little child,
hungry and shievering in the cold.
I became angry and said to god,
“why do you allow this?
Why don’t you do something ?”
God did not reply.
That night he said,
Quite suddenly :

**“I certainly did something, i made you”**

# WAY OF LIFE

I expect to pass through this world but once. Any good therefore that i can do, or any kindness that i can show to any fellow creature, let me do it now.For i shall not pass this way again.

# BELIEF

Our faith teaches us that nothing is impossible to achieve if we have enough belief and determination. God has been good to us and we never forget that.

# LIFE

I asked God for all things
that i might enjoy life.
He gave me life that
i might enjoy all things.

# DESIRE

FIRST DESERVE
THEN DESIRE

# DONATE BLOOD

## DONATE YOUR BLOOD.

## IF NOT YOU, THEN WHO?

# ஆசிரியர் பணி ஒரு அறப்பணி

If God and the TEACHER are standing together, who does the student salute first?

According to Indian culture, the answer is the TEACHER, because without his direction and help, the student could not have met God.

# MY DREAM

I want stars on the ground
I want to fly without wings
I want to walk on the sky
I want ten eyes to admire nature
I want my mother to be always with me
These things are only my dreams
But, i want make a world without
religion. A dream that i wish would
come to true

J.Rajeswari
X std

# TEACHER

One day with a great teacher is better than a thousand days of diligent

# TEACHER

Who should be preferred?

A learned teacher?

or

A learning teacher?

**A teacher who is ever learning**